செய்தி வெளியீடு எண்: 558 29.8.2007

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமை யில் இன்று தலைமைச் செயலகத்தில்; — சென்னை மாநகரிலும், மற்ற மாநகரங்களிலும் வைக்கப்பட்டுள்ள விளம்பர பலகைகளை உடனடியாக அகற்றுவது பற்றி விரிவாக கலந்தாய்வு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் எல்.கே. திரிபாதி, தமிழ்நாடு அரசு தலைமை வழக்கறிஞர் ஆர். விடுதலை, மாநில அரசின் உரிமையியல் வழக்கறிஞர் ஜெ. ராஜா கலிபுல்லா, உள்துறைச் செயலாளர் திருமதி எஸ். மாலதி, நகராட்சி நிர்வாகத் துறை செயலாளர் தீனபந்து, சென்னை மாநகராட்சி ஆணையர் ராஜேஷ் லக்கானி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர். ஜெயா, கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம் ஒழுங்கு) கே. விஜய குமார், சென்னை மாநகர காவல் துறை ஆணையாளர் நாஞ்சில் குமரன், காவல் துறை கூடுதல் ஆணையர் (போக்குவரத்து) சுனில் குமார் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

ஒரு மணி நேரத்திற்கு மேல் நடைபெற்ற இந்த விவாதத்திற்கு பிறகு எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு :—

டெல்லி, பெங்களூர் மாநகரங்களைப் போல, சென்னை மாநகரிலும் “ஹோர்டிங்ஸ்” எனப்படும் விளம்பரப் பலகைகளையும், அவற்றுக்கான கட்டு மானங்களையும் அகற்றி அழகு நகராக்கும் முயற்சியில் ஈடுபட்டுவரும் இந்த அரசின் நடவடிக்கைக்கு எதிராக சிலர் நீதி மன்றங்களுக்கு சென்று இடைக்காலத் தடை பெற்றுள்ளனர். அந்தத் தடையை நீக்கி அரசின் குறிக் கோள் நிறைவேறிட நீதி மன்றங்களில் முறைப்படி வாதாடி வருவதுடன் —

அதற்கிடையே; இடைக்காலத் தடை இல்லாமல், தன்னிச்சையாக மாநகரில் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளை உடனடியாக அகற்றிட அரசு முன் வந்துள்ள நிலையில், அந்த விளம்பரப் பலகைகளை அவர்

களாகவே அகற்றிட வேண்டுமென்றும், இல்லாத பட்சத்தில் அரசே அவற்றை அகற்றி விடும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் அரசியல் கட்சிகளும், பொது நிறுவனங்களும் தாங்கள் நடத்து கின்ற நிகழ்ச்சிகளை யொட்டி நகரின் பல பகுதிகளிலே வைத்திடும் விளம்பரத் தட்டிகளை நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்பு மூன்று நாட்களும், நிகழ்ச்சிக்குப் பின் இரண்டு நாட்களும் மட்டுமே அவைகளை வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவைகளும் அகற்றப்பட்டு விடும்.

இந்த அறிவிப்புகள் தமிழகத்திலே உள்ள ஆறு மாநகராட்சிகளுக்கும் பொருந்தும்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.